


**27.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பொருளாதாரத்தில் நம் தேசம் முதன்மை பெற உள்நாட்டு தயாரிப்புகளை ஊக்குவிப்பது அவசியம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. எதிர்கால இந்தியாவை வடிவமைக்கும் தொலைநோக்கு திட்டமாக புதிய தேசிய கல்விக்கொள்கை திகழ்கிறது என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

3. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரியில் இன்றும், நாளையும், கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

4. நீலகிரி மாவட்ட அணைகளின் கரையோரங்களில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. ஆசிய தடகள சாம்பியின் பட்ட போட்டியின் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தங்க பதக்கம் வென்றுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

சுதந்திரம் அடைந்த நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா கனவு நனவாவதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் 5 ஆயிரத்து 536 கோடி ரூபாய் மதிப்பில் முடிவடைந்த நலத்திட்டங்களை இன்று தொடங்கி வைத்ததுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர், இக்கனவு நனவாவதில் அனைத்து குடிமக்களின் பங்களிப்பு தேவை என்றார்.

3-வது பெரிய பொருளாதார வளர்ச்சி நாடாக நம்தேசம் உருவாக 2ம் 3-ம் நிலை நகரங்களில் பொருளாதார வளர்ச்சி முக்கியமானது என்று சுட்டிக்காட்டினார்.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் பற்றி கூறியஅவர், 22 நிமிடங்களில் 9 தீவிரவாத மறைவிடங்கள் தகர்க்கப்பட்டதாகவும், இந்தியா மீது தொடுக்கப்பட்டது மறைமுக போர் அல்ல, அது திட்டமிட்ட தாக்குதல் என்பது புலப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தாக்குதலின் போது கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு தேசிய கொடியுடன் வழங்கிய இறுதி மரியாதை மூலம் அந்நாடு தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்ததும், இந்தியா மீதான தாக்குதல் அந்நாட்டின் ஒருங்கிணைந்த ராணுவ நடவடிக்கை என்பது புலப்படுவதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

உலக நலத்திற்கு பங்களிக்கும் வகையில் நம்நாடு முன்னேற்றப் பாதையில் செல்வதையே தாம் விரும்புவதாகவும், கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அர்ப்பணிப்புடன் மத்திய அரசு செயலாற்றுவதாகவும் தெரிவித்தார்.

சிந்து நதி ஒப்பந்தத்தால் கடந்த 60 ஆண்டுகளாக ஜம்முகாஷ்மீரின் ஆறுகள் தூர்வாரப்படவில்லை என்றும், இதனால் 100 சதவிகித தண்ணீர் கிடைக்க வேண்டிய அணைகளில் 2, 3 சவிகிதம் தண்ணீர் மட்டுமே கிடைப்பதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

தற்போது இந்த அணைகளை தூய்மைப்படுத்தும் வகையில் சிறிய மதகுகள் திறந்துவிடப்பட்டு உள்ளதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

<u>கல்விக்கொள்கை</u>

கலாச்சார மதிப்பீடுகளை பாதுகாத்து எதிர்கால கல்வி முறைக்கு புதிய தேசிய கல்விக்கொள்கை 2020 வித்திடுவதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

புதுதில்லியில் கல்விசார் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், எதிர்கால இந்தியாவை வடிவமைக்கும் தொலைநோக்கு கல்வி திட்டமாக இது திகழ்கிறது என்றார்.

கட்டமைப்பு, உள்ளடக்கம், நவீனமயத்திற்கு உயர் முன்னுரிமையுடன் கல்வித்துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

நம்நாட்டின் இளையோருக்கான முக்கிய தூணாக கல்வி திகழ்கிறது என்று கூறியஅவர், நாட்டில் 5 முதல் 23 வயதிற்கு உட்பட்ட 30 கோடி மாணாக்கருக்கு கல்வி சீர்த்திருத்தங்கள் அவசியமாகிறது என்றார்.

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

மேம்படுத்தப்பட்ட நடுத்தர ரக அதிநவீன விமான திட்ட செயலாக்கத்திற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அனுமதி வழங்கியுள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்பு திறனை மேம்படுத்த வழிவகை செய்யும் இந்த விமான திட்டம் வலுவான உள்நாட்டு வான்வெளி உற்பத்தி சூழலை முன்னெடுத்துச் செல்ல வழிகோலுகிறது.

இதனை வடிவமைப்பதற்கான சமவாய்ப்புகள் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு போட்டியின் அடிப்படையில் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சட்ட ஒழுங்குமுறைகளை நடைமுறைப் படுத்தும் உள்நாட்டு தொழிற்சாலைகள் இதுசார்ந்த ஏலத்தில் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது.

வான்வெளித் துறையில் இந்தியா தற்சார்பு நிலையை எட்ட இந்த விமான திட்டம் ஒரு இன்றியமையா மைல்கல்லாக திகழும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>பிரதாப் ராவ் ஜாதவ்</u>

ஆரோக்கிய வாழ்வின் மையமாக யோக பயிற்சி திகழ்கிறது என்று மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

11-வது சர்வதேச யோகா தினத்திற்கு 25 நாட்களே எஞ்சியுள்ள நிலையில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் யோகா விழாவை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், தற்போதைய காலகட்டத்தில் யோகக்கலை மிகவும் அவசியமானது என்றார்.

வயது, பாலினம், எல்லைகளை தாண்டி யோக கலை சர்வதேச நாடுகளின் அமைதி மற்றும் ஒருமைப்பாட்டிற்கான மொழியாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் யோகாசன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖❖

<u>சுப்ரியா சுலே</u>

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து உலகநாடுகளிடையே எடுத்துரைப்பதன் ஒருபகுதியாக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் கத்தாரில் தங்களது முதல்கட்ட பயணத்தை இன்று நிறைவு செய்கின்றனர்

கத்தார் வெளியுறவு அமைச்சர் ஷேக் அப்துல் அஸீஸ் பின் ஃபைசல், அந்நாட்டின் உள்விவகார அமைச்சர் டாக்டர் ஹம்தத் பிந்த் ஹசன் மற்றும் உயரதிகாரிகளிடம் இக்குழுவினர் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

எல்லைத்தாண்டிய தீவிரவாத கட்டமைப்புகள் தகர்க்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடும், கத்தார் அதிகாரிகளிடையே வலியுறுத்தப்பட்டது

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த கத்தார் நாடு தீவிரவாதத்திற்கு எதிரான அந்நாட்டின் பூஜ்ஜிய சகிப்புத் தன்மையை எடுத்துரைத்தது.

இந்திய தரப்பு இதற்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.

கத்தார் பத்திரிக்கையாளர்கள் மற்றும் அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடையே ஒற்றுமை, ஒருமைப்பாடு, பன்முகத்தன்மை போன்றவற்றின் மதிப்பீடுகளை அனைத்து கட்சி குழுவினர் எடுத்துரைத்தனர்.

கத்தார் பயணத்தை முடித்துக்கொண்டு இக்குழுவினர் இரண்டாவது கட்ட பயணமாக இன்று தென்னாப்பிரிக்கா செல்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சென்னை கொளத்தூரில் 22 கோடியே 61 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 3 மூத்த குடிமக்கள் உறைவிட கட்டுமானப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4 கோடியே 36 லட்ச ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட குளம் மற்றும் பூங்காவை திறந்து வைத்து 91 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட கால்வாயையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 150 மாற்றுத்திறனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களை வழங்கியதுடன் 481 மாணாக்கருக்கு தையல் இயந்திரம், மடி கணினிகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

ஒடிசாவை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

இது வடக்கு திசையில் நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் வலுவடைய கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்றும், நாளையும், கோவை, நீலகிரியில் கன முதல் அதிகனமழையும்,

நெல்லை, தேனி, தென்காசி மாவட்டங்களில் கன முதல் மிககன மழையும்,

திருப்பூர், திண்டுக்கல் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

தமிழக கடலோரம் மன்னார் வளைகுடா, குமரிக்கடல், வங்கக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் வரும் 31-ம் தேதிவரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

நீலகிரி

நீலகிரி மாவட்டத்தில் கனமழை தொடர்வதால், குந்தா அணையிலிருந்து இரண்டு மதகுகள் மூலம் 200 கனஅடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

கல்லட்டி மலைப்பாதையில் ராட்சத பாறைகள் சாலையில் விழுந்ததால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உதகையில் நிலச்சரிவு ஏற்பட்ட பெம்பட்டி பகுதியை மாநில அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் இன்று ஆய்வு செய்தார்.

❖❖❖❖❖❖❖

மழை - அணைகள்

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை காரணமாக நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

கோவையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணை ஒரே நாளில் 4 அடி உயர்ந்து 30 அடியை இன்று எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை நீடிப்பதால் நெல்லை மாவட்டம், பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டமும் வெகுவாக உயர்ந்துள்ளது.

மணிமுத்தாறு அருவி, திருக்குறுங்குடி நம்பிகோவில் பகுதிகளில் மறு உத்தரவு வரும்வரை சுற்றுலா பயணிகள் செல்லவும், ஆற்றில் குளிக்கவும் வனத்துறை தடைவிதித்துள்ளது.

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து 18 ஆயிரத்து 461 கனஅடியாக அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 74.74 அடியாக உள்ளது.

முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டமும் 118 அடியாக உயர்ந்துள்ளது.

❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் கனமழையால் முக்கிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சப்பாத்து பாலம் நீரில் மூழ்கியுள்ளது.

திற்பரப்பு அருவியில் தண்ணீர் கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

தேர்வு ஒத்திவைப்பு

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறவிருந்த தேர்வு தற்காலிகமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

வினாத்தாள் கசிந்ததாக கிடைத்த தகவலையடுத்து இந்நடவடிக்கை

பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் 106 கல்லூரிகளில் இந்த தேர்வு அனைத்து மையங்களிலும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

திருச்செந்தூர்

தூத்துகுடி மாவட்டம் திருச்செந்தூரில் இரண்டாவது நாளாக கடல் 80 அடி உள்வாங்கி காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖

## கோவில்

கரூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் கம்பம் ஆற்றில் விடும் வைபவம் நாளை நடைபெறவுள்ளதால் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது

❖❖❖❖❖❖❖

## தடகளம்

தென்கொரியாவில் நடைபெறும் ஆசிய தடகள சாம்பியின் பட்ட போட்டியின் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தங்க பதக்கத்தை வென்றுள்ளார்.

நடப்பு தொடரில் இந்தியாவின் முதல் தங்கப்பதக்கம் இதுவாகும்.

முன்னதாக 20 கிலோ மீட்டர் நடை ஓட்டத்தில் இந்தியாவின் செர்வின் செபாஸ்தியன் வெண்கல பதக்கத்தை வென்றார்.

❖❖❖❖❖❖❖

## கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

முதலாவது தகுதி சுற்று ஆட்டத்திற்கு முன்னேறும் முனைப்புடன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு இன்றைய ஆட்டத்தில் களமிறங்குகிறது.

❖❖❖❖❖❖❖